## தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை – 2016

தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவறான நிதி நிலைமை கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அகல் விரிவான கூற்று மற்றும் உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுகளின் கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகார சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 2015 இன் 05 ஆம் இலக்க தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் 20 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. 2016 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தலில் தாதமத்தின் காரணமாக அதிகார சபையின் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 பெப்ரவரி 14 திகதி அதிகார சபையின் தலைவருக்கு வழங்கப்பட்டது. நிதி அதிகார சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் அதிகார சபையின் வருடாந்த அறிக்கையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்க ஒத்ததாக (ISSAI 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந் நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக் கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் அதிகார சபையின் நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி அதிகார சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் விளைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.4 முனைப்பழிப்புள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழிப்புள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் நிதிக்கூற்றுக்களில் ஏற்படுத்தும் தாக்கங்களைத் தவிர, நிதிக்கூற்றுக்களானவை தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமம்

இலங்கை கணக்கீட்டு நியமம் 1 இல் 117 ஆம் பந்தியின் பிரகாரம், நிதிக் கூற்றுக்களை விளங்கிக் கொள்ளல் தொடர்பாக பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கைகள் வெளிப்படுத்தப்படவேண்டுமெனினும், அதிகார சபையினால் மீதி இருப்பு மற்றும் அரச மானியம் தொடர்பான கணக்கீட்டு கொள்கைகள் தொடர்பான கணக்கீட்டு கொள்கையினை வெளிப்படுத்தியிருக்கவில்லை.

#### 2.2.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

நிதி அறிக்கையிடுவதற்கான கருதுகோள் சார் சட்டகத்தின் 4.56 பந்தியின் பிரகாரம் நிறுவனத்தின் தனது நிதிக் கூற்றுக்களை தயாரிக்கும் போது கூடுதலாக பயன்படுத்தும் அளவை முறை வரலாற்றுக் கிரயம் ஆயினும் அதனை ஏனைய அளவை முறைகளுடன் ஒன்றினைந்து காணப்பட்டது. அதிகார சபையின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளுக்கு வெவ்வேறாக அளவை முறையினை இனங்காணாமல் நிதிக் கூற்றுகளில் கணக்கீட்டு கொள்கைகள் 2.2 இன் கீழ் வரலாற்று கிரயத்தை மாத்திரம் கடைபிடிப்பதாக காட்டப்பட்டிருந்தது.

#### 2.2.3 கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2017 ஆண்டு தெடர்பாக மீளாய்வாண்டின் போது கிடைத்திருந்த ரூபா 300,000 இற்கான மருந்துகள் வியாபார மற்றும் மருந்துகள் இறக்குமதி அனுமதிப் பத்திர கட்டண வருமானம் மீளாய்வாண்டிற்கான வருமானம் ஒன்றென கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நடைமுறை பொறுப்புகளின் கீழ் வருமான முற் பெறுவனவு எனக் காட்டப்பட்டிருந்த ரூபா 14,360,439 தொகையில் மீளாய்வாண்டிற்கான வருமானத்தை இனங்கண்டு கணக்கீடு செய்திருக்கவில்லை

(இ) மீளாய்வாண்டின் போது வழங்கியருந்த மருந்துகள் உற்பத்தி செய்வதற்கான அனுமதிப் பத்திரங்கள் 04 தொடர்பாக ரூபா 12,000 தொகை அந்த வருமானக் கணக்கிற்கு செலவு வைக்காமல் செலுத்த வேண்டிய முற்பணக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது.

(ஈ) அதிகார சபையின் தலைவரினால் நன்கொடை ஒன்றாக வழங்கியிருந்த பொருட் பதிவேட்டு புத்தகத்தில் உட்படுத்தியிருந்த ரூபா 231,246 இற்காக 09 நிலையான சொத்து விடயங்களும், மருந்துகள் வழங்கள் பிரிவனால் நன்கொடையாக வழங்கியிருந்த ரூபா 9,214 தொகைக்கான UPS இன் பெறுமதியும் உட்பட கூட்டத்தொகை ரூபா 240,460 இற்கான நிலையான சொத்துக்களை கணக்கீடு செய்திருக்கவில்லை

(உ) மீளாய்வாண்டிற்கான ஆதனங்கள் பொறித் தொகுதி மற்றும் உபகரணங்களின் பெறுமானத்தேய்வு ரூபா 11,477 தொகை குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

**2.2.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

மீளாய்வாண்டின் போது மருத்துவ உபகரணங்கள் இறக்குமதி செய்வதற்கான அனுமதிப் பத்திரக் கட்டணம் (Device import license income ) ஆகிய ரூபா 12,624,000 தொகையும் வருமானக் கூற்றுகளில் ஏனைய செலவுகளில் உட்படத்தியிருந்த ரூபா 63,621 தொகைக்கான இனங்காணப்படாத (Un-reconciled expense) 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நடைமுறை பொறுப்புக்களில்ள உட்படுத்தியிருந்த ரூபா 14,360,439 இற்கான முற்பணப் பெறுவனவு (Advance Receipts) உடன் தொடர்புடைய அட்டவணைகள் விரிவான தகவல்கள் மற்றும் முற்பணப் பெறுவனவுகள் தொடர்பாக காலப்பகுப்பாய்வுகள் கணக்காய்விற்கு சமர்பித்திருக்கவில்லை.

**2.3 சட்டங்கள் விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணக்கமின்மை**

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் பின்வருமாறு ஆகும்.

| சட்டங்கள் விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| 2009 மே 12 ஆம் திகதி 1601/15 ஆம் இலக்க அரச அதிவிஷேட வர்த்தமானி | (i) வர்த்மானியின் பிரகாரம், மருந்து ஒன்று பதிவு செய்வதற்காக தற்காலிக சான்றிதழ் ஒன்று வழங்குவதற்காக மற்றும் ஐந்து வருடங்களுக்கு செல்லுபடியாகும் விதமாக பதிவு செய்தல் சான்றிதழ் ஒன்று புதுப்படுத்தவதற்காக ரூபா 10,000 வீதம் கட்டணம் அறவிடப்பட வேண்டும் எனினும் அதற்கு முரணாக வழங்கப்பட்ட அந்த சான்றிதழ்களுக்கு ரூபா 3,000 வீதம் அறவிடப்பட்டிருந்தது. |

(ii) வர்த்தமானியின் பிரகாரம், ஐந்து வருடங்களுக்கு செல்லுபடியாகும் விதமாக முதலாவது தடவை மருத்துவ உபகரணம் ஒன்று பதிவு செய்வதற்காக கட்டணம் ரூபா 7,500 தொகை எனினும், வழங்கியிருந்த அவ்வாறான 4 சான்றிதழ்களுக்கு ரூபா 5000 வீதம் மற்றும் சான்றிதழ் ஒன்றிற்கு ரூபா 1000 வீதம் ரூபா 21,000 தொகை மருத்துவ உபகரணம் ஒன்று பதிவு செய்வதற்கான தற்காலிக சான்றிதழ் ஒன்று வழங்குவதற்காக கட்டணம் ரூபா 2000 தொகை எனினும், வழங்கப்பட்டிருந்த அவ்வாறான 02 சன்றிதழ்களுக்காக ரூபா 1,000 வீதம் ரூபா 2,000 தொகையும் அறவிடப்பட்டிருந்தது.